தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்
11/22, மாங்காடுசாமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொலைபேசி எண். 044–28221233, தொலைநகல். 044–28253021

TACTV

## உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு (PLC) முக்கிய அறிவிப்பு

பார்வை: 29.10.2013 அன்று நடைபெற்ற 35–வது இயக்குநர் குழு கூட்டத்தின் 14–வது தீர்மானம்.

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது.

மாதாந்திர கட்டணம் மற்றும் நிலுவைத்தொகை பாக்கி வைத்துள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள்(LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு (PLC) அபராதத்தொகை (Penalty) விதிப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இயக்குநர் குழு பின்வருமாறு முடிவு செய்துள்ளது.

1. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC) அந்தந்த மாதத்திற்குரிய கட்டணத்தொகையினை அடுத்த மாதத்தின் கடைசி வேலை நாளுக்குள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், 01.01.2014 முதல் அந்தந்த மாதத்திற்கான நிலுவைத்தொகையின் பேரில் மாதம் ஒன்றிற்கு ஒரு சதவீதம் (1%) என்ற அடிப்படையில் நிலுவையிலுள்ள நாட்களுக்கு கணக்கிட்டு அபராதத்தொகை வசூல் செய்யப்படும். உதாரணமாக, 2013–ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான கட்டணத்தொகையினை 2013–ம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் கடைசி வேலை நாளுக்குள் அபராதமின்றி செலுத்தலாம். அவ்வாறு செலுத்தாத நபர்களுக்கு 01.01.2014 முதல் 2013–ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான நிலுவைத்தொகையின் பேரில் மாதம் ஒன்றிற்கு ஒரு சதவீதம் (1%) என்ற அடிப்படையில் நிலுவையிலுள்ள நாட்களுக்கு கணக்கிட்டு அபராதத்தொகை வசூல் செய்யப்படும்.

2. மேலும் **31.10.2013** வரை உள்ள நிலுவைத்தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO), பன்முனை கேபிள் ஆப்பரேட்டர்கள் (MSO), மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC), வருகிற **31.12.2013–க்குள்** செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு **31.12.2013–க்குள்** செலுத்துபவர்களுக்கு அபராதத்தொகை ஏதும் விதிக்கப்பட மாட்டாது. ஆனால் மேற்காணும் தேதிக்குப் பிறகும் நிலுவைத்தொகை பாக்கி வைத்திருக்கும் நபர்களுக்கு, **01.01.2014** முதல் நிலுவைத்தொகையின் பேரில் மாதம் ஒன்றிற்கு அரை சதவீதம் **(0.5%)** என்ற அடிப்படையில் நிலுவையிலுள்ள நாட்களுக்கு கணக்கிட்டு அபராதத்தொகை வசூல் செய்யப்படும்.

எனவே, இவ்வாய்ப்பினை பயன்படுத்தி, அவரவர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையினை மேலே குறித்த கால வரையறைக்குள் அபராதமின்றி செலுத்தி பயனடையுமாறும் மேலும் மாதாந்திர கட்டணத்தொகையினை மேலே குறித்த கால வரையறைக்குள் தவறாது செலுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மேலாண்மை இயக்குநர்**